# 5 ஆம் வகுப்பு   தமிழ் பயிற்சித்தாள் - 10

## இயல் -2

## பாடல் - கடல்

பெயர்:

தேதி :

**கடல்**

எல்லை அறியாப் பெருங்கடலே – நீதான்
இரவும் உறங்காயோ? கடலே
அல்லும் பகலும் அலைகடலே – உனக்கு
அலுப்பும் இலையோ கருங்கடலே

பொங்கு திரைகளோ? கடலே – அவை
புரவி நிரைதாமோ? கடலே
எங்கும் உனதொலியோ? கடலே! – அன்றி
இடியின் முழக்கமோ? கடலே!

மலையை வயிற்றடக்கும் கடலே! – எண்ணில்
மகர மீனுலவும் கடலே!
விலைகொள் முத்தளிக்கும் கடலே! – சிப்பி
விளையாடற் குதவும் கடலே!

மழைக்கு மூலமும் நீ கடலே! – அதை
வாங்கி வைப்பதும் நீ, கடலே!
வழுத்து மகிமையெலாம் கடலே! – எவர்
மதித்து முடிக்கவலார் கடலே!

– கவிமணி தேசிக விநாயகனார்



SV62U7

பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் (எதுகை) சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| எல்லை | |
| பொங்கும் | |
| மலையை | |
| திரைகளோ | |
| கடலே | |

பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் (மோனை) சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| அல்லும் | |
| விலைகொள் | |
| வாங்கி | |
| கடலே | |
| மகிமை | |

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக!

1. பெருமை + கடல் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

அ) பெருமைகடல்   ஆ) பெருங்கடல்



இ) பெரியகடல்   ஈ) பெருமைக்கடல்

2. கருங்கடலே என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

6

அ) கருமை + கடலே   ஆ) கருங் + கடலே



இ) கரும் + கடலே   ஈ) கரு + கடலே

3. 'திரை' என்ற சொல்லின் பொருள் _______________

அ) மலை   ஆ) அலை

இ) வலை   ஈ) சிலை

4. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது _____________

அ) வானம்   ஆ) பூமி

இ) கடல்   ஈ) நெருப்பு

LIVEWORKSHEETS